செ.வெ.எண்:56 நாள்:30.05.2022

# மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு மாநகராட்சி வளாகத்தில், ஈரோடு மாநகராட்சி மக்களுக்கான மக்கள் சேவை மையத்தினை திறந்து வைத்து, சாலையோர வியாபாரிகளுக்கு நவீன தள்ளுவண்டிகளை வழங்கினார்.

------------

ஈரோடு மாநகராட்சி வளாகத்தில் இன்று (30.05.2022) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹெச்.கிருஷ்ணனுண்ணி இஆப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.கணேசமூர்த்தி ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு மாநகராட்சி மக்களுக்கான மக்கள் சேவை மையத்தினை திறந்து வைத்து, சாலையோர வியாபாரிகளுக்கு நவீன தள்ளுவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு மாதத்திலும் ஆய்வு செய்கிறார்கள். அந்த ஆய்வின் அடிப்படையில் என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளது, என்னென்ன பணிகளை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்பதை, அந்த ஆய்வின் முடிவின் அடிப்படையில் அதிகாரிகளுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் தகவலினை தெரிவிக்கின்றார்கள். அந்த தகவலின் அடிப்படையில், பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, தூர்வாரும் பணிகளை நேரடியாகவே களத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். மேலும் சில அலுவலகங்களுக்கு சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்கள் வசிக்ககூடிய இடங்களுக்கு சென்று அவர்களிடத்திலே நேரடியாக குறைகளை கேட்டறிந்து, அந்த பணிகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நமது ஈரோடு மாவட்டத்திலும், ஈரோடு மாநராட்சி பகுதியில் பல்வேறு பணிகளை முன்னெடுத்து, செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக நமது மாவட்டத்தை பொறுத்தவரை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் மற்ற

அதிகாரிகளும் இணைந்து, பல திட்டங்கள் புதிதாக கொண்டு வரப்பட்டுள்ளது. அவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்திற்கென ஏறத்தாழ 85 திட்டங்களை முன்னெடுத்து, பணிகள் துவங்கப்பட்டுள்ளது. அதிலே மிகச்சிறப்பான திட்டங்கள் என்றால், இரண்டு புறநகர் பேருந்து நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. இதற்காக, சுமார் ரூ.200.00 கோடி ஆகும் என்று திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதிலே மிக முன்னுதாரணமான பேருந்து நிலையமாக அமைக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும், சி.என்.சி. கல்லூரியில் சில முன்னேற்றப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்படுகிறது. இரயில்வேயில் என்னென்ன பணிகள் இருக்கின்றதோ, அந்த பணிகளை செய்வதற்கு அவர்கள் முன்னின்று, அதனை செய்கின்றார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாள்முதல், இன்றைக்கு வரை பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் ஓராண்டு காலத்தில் சொல்லத்தகுந்த வகையில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிலே அடிமட்டத்திலே இருக்கின்ற மக்களுக்கு பயன்படுவதில் இருந்து மிகப்பெரிய திட்டங்கள் வரை அதில் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பொறுத்தவரை, ஈரோடு மாநகராட்சி மக்களுக்கான மக்கள் சேவை மையம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் ஈரோடு மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்களால் தினசரி பெறப்படும் ஈரோடு மாநகராட்சியினால் வழங்கப்பட்டு வரும் நலத்திட்டங்கள் தொடர்பான விண்ணப்பங்கள், மாநகராட்சியினால் வழங்கப்படும் அத்தியாவசிய பணிகள் தொடர்பான கோரிக்கை மனுக்கள் மற்றும் பிற துறை தொடர்பான சேவைகளான ஆதரவற்ற முதியோர் உதவித்தொகை வழங்க கோருதல், வீடற்றவர்களுக்கான வீடு வழங்க கோருதல், குடும்ப அட்டை வழங்க கோருதல் முதலான கோரிக்கை மனுக்கள் மீது இம்மையத்தினால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, உடனடி தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இச்சேவை 24 மணிநேரமும் தொடர்ந்து இயங்குகின்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்படும்.

அதேப்போல, ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் காய்கறி, பழங்கள், உணவு வகைகள் மற்றும் பூ வியாபாரம் செய்து வரும் 127 சாலையோர வியாபாரிகளுக்கு தேவையான விற்பனை வண்டிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் கீழ் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் வழங்க தமிழ்நாடு அரசால் மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, முதற்கட்டமாக இன்று (30.05.2022) 10 காய்கறி விற்பனை வண்டி, 10 பழ விற்பனை வண்டி, 5 உணவு வகைகள் விற்பனை வண்டி, 15 பூ விற்பனை வண்டி ஆகிய சாலையோர வியாபாரிளுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், குடிநீர் வசதி, சாலை வசதி, நீண்ட நாட்களாக தேங்கி கிடங்கும் பிரச்சனைகள் அவற்றை எல்லாம், படிப்படியாக தீர்ப்பதற்கான முழுமையான நடவடிக்கை நம்முடைய அரசும், மாவட்ட நிர்வாகமும், ஈரோடு மாநகராட்சியும் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்தியமங்கலம் சாலையில் விரிவாக்கம் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கீழ்பவானி வாய்காலில் கான்கிரீட் அமைப்பது பொறுத்தவரை, இரண்டு பிரிவாக விவசாயிகள் கருத்துக்களை வைத்துள்ளார்கள். இரண்டு பிரிவிலும் விவசாயிகளின் நலன் கருதி, அவர்களிடத்திலே பேசி, நியாயமான, சமாதானமான முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காக, அரசு பெரும் முயற்சி எடுத்து வருகிறது. மேலும், விவசாயிகள் பாதிக்கப்படகூடாது என்பதில் அரசு திட்டவட்டமாக உள்ளது. எனவே, மேல்மடை விவசாயிகள் மற்றும் கீழ்மடை விவசாயிகள் எவ்வித பாதிப்பும் அடையாமலுல், அதேபோல் வாய்க்காலில் வருகின்ற தண்ணீர் வீணாகாமல் பயன்டுத்துவதற்கும் ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதிலே விரைவாக ஒரு முடிவு எட்டப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.நவமணி கந்தசாமி, மரியாதைக்குரிய துணை மேயர் திரு.வே.செல்வராஜ், மாநகராட்சி ஆணையர் திரு.சிவகுமார், மண்டல தலைவர்கள் திரு.ப.க.பழனிச்சாமி (1வது மண்டலம்), திரு.மு.ப.சுப்ரமணியம் (2வது மண்டலம்), திரு.ப.சசிக்குமார் (3வது மண்டலம்), திரு.நா.தண்டபாணி (4 வது மண்டலம்) உட்பட உதவி ஆணையர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், தன்னார்வலர்கள் தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு.